(ஆ) ஆம் எனில், அப் பணிமனை எந்தப் பகுதியில் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் துணைப் பணிமனை ஒன்று அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிமனை எப்பொழுது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து நம்முடைய போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கவேண்டுமென்று நாம் சொல்லி இருக்கிறோம். இப்பொழுது ரெவின்யூ டிபார்ட்மென்டிலே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு தீவிரமான நடவடிக்கை எடுத்து, உடனடியாக அந்தப் பணிமனைக் கட்டப்படும்.

கூட்டுறவு சங்கங்களின் மூலம் ''டீசல்'' வழங்குதல்.

*வினா எண். 827—திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மானாமதுரைப் பகுதிகளில் டீசல் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதால், கூட்டுறவு சேவை சங்கங்கள், கூட்டுறவு பண்டகசாலை ஆகியவற்றின் மூலமாக தேவையான டீசல் சப்ளை செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இல்லை.

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை, திருப்புவனம், திருப்பாச்சேத்தி பகுதிகளில் கரும்பு விவசாயம் மிக அதிகமாக இருக்கிற நிலையில், அங்கு வெல்லம் தயாரிக்கின்ற ஆலைகளும் மற்றும் தண்ணீர் இறைக்கின்ற பம்பு செட்டுகளும் இந்த மாதிரி டீசல் தட்டுப்பாடு காரணமாக, இயங்காமல் இருந்தன. ஆகவே, அது குறித்து ஒரு குறுகிய கால

வினாவாகத்தான் இதை நான் நிதியமைச்சரிடம் கொடுத்தேன். இது போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது, திருப்புவனத்தில் ஒன்று, மானாமதுரையில் ஒன்று என்று இரண்டு டீசல் பங்குகள் இருக்கின்றன. அவர்களுக்கு ஒதுக்கப்படுகிற கோட்டாவை எடுத்து விநியோகிக்கின்ற பொருளாதார நிலையில் அவர்கள் இல்லை. ஆகவே, அப்படிப்பட்டச் சூழ்நிலையில் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்து, அப்படி தட்டுப்பாடு இருக்கிற நேரங்களில், கூட்டுறவுச் சேவைச் சங்கங்களின் மூலமாக அதை விநியோகிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விநியோகத்தில், யார், யாருக்கு கோட்டா ஒதுக்க வேண்டுமென்ற அந்த நிலை, மத்திய அரசாங்கத்தினுடைய நேரடிப் பார்வையில் இருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரை இவர்களுக்குத்தான் கோட்டா கொடுக்கவேண்டுமென்று, நாம் சொல்ல முடியாது. எனவே, அந்த பங்குகளிலேயிருந்து, யார், யாருக்கு, என்ன, என்ன முறையிலே முன்னுரிமை கொடுக்கலாம் என்பதை மட்டும் தமிழக அரசைப் பொறுத்தவரை சொல்ல முடியும். எனவே, மத்திய அரசாங்கத்தைக் கேட்டுத்தான் நாம் அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு அந்தக் கருத்தை நாம் எழுத முடியும்.

[முற்பகல் 9-50.]

திரு. க. பரமலை: தலைவர் அவர்களே, இந்த டீசல் அல்லது கெரோசின் போன்றவைகளை ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு மாற்றுவதற்கு தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக ஒரு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நமக்கு ஒதுக்கப்படுகின்ற அந்த சதவிகிதத்தை நம்முடைய கூட்டுறவுத் துறை மூலம் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோட்டா நமக்கு ஒதுக்கப்பட்டிருக்குமேயானால், அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், அந்த கோட்டாவை ஒதுக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திடம் இருக்கிற காரணத்தால், அவர்களிடம் கேட்டு அவர்கள் ஒதுக்கிய பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 எப்ரல் 21

திரு. தி. க. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சக்கணக்கான டீசல் பம்ப் செட்டுகள் இருக்கின்ற காரணத்தால் திருப்பத்தூர், திருப்பாத்துறை போக மற்ற அனைத்து இடங்களிலும் இது பரந்து கிடக்கின்ற காரணத்தால், மத்திய அரசிடம் பேசி, இதை சுமூகமாக கூட்டுறவுப் பண்டக சாலைகளில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, எந்தெந்த பங்க் சொந்தக்காரர்களுக்குக் கோட்டா ஒதுக்கப்பட்டிருக்கின்றதோ அவர்கள் மூலமாக இவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று மாநில அரசு சொல்லி இருக்கிறது. இருந்தாலும் கூட்டுறவுச் சங்கங்களில் வைத்துத்தான் விநியோகம் செய்ய வேண்டும் என்கின்ற சூழ்நிலை வருமானால், அதன் மீது மத்திய அரசைக் கேட்டு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

கைத்தறித் துண்டுகள் ஏற்றுமதி.

*வினா எண். 828—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துண்டுகள் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி ஆகிக் கொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஏப்ரல் 1980 முதல் சனவரி 1981 முடிய ரூபாய் 3 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துண்டுகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கைத்தறித் துணிகளை அந்தந்த நாட்டு உடைகளை இங்கேயே அவர்கள் விரும்புவதைப் போல தைத்து ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியை ஒட்டி கேட்கவேண்டும்.